# வடமாநிலங்களில் கனமழை: பிரதமர் ஆலோசனை

**புது தில்லி, ஜூலை 10:** நாட்டின் பல்வேறு பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ளதையடுத்து சூழலைத் தொடர்ந்து கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மூத்த அமைச்சர்களுக்கும், உயரதிகாரிகளுக்கும் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தாமதமாகத் தொடங்கிய தென்மேற்குப் பருவமழை தற்போது பல்வேறு பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது. முக்கியமாக, கேரளம், கர்நாடகம், வடமாநிலங்களான தில்லி, ஹிமாசல், உத்தரகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் கனமழை பெய்து வருகிறது. அதனால், யமுனை உள்ளிட்ட நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதோடு, மலைப்பாங்கான பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

**37 பேர் உயிரிழப்பு:** வடமாநிலங்களில் கடந்த இரு நாள்களில் மழை தொடர்பான சம்பவங்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் ஹிமாசலில் 18 பேரும், பஞ்சாப், ஹரியாணாவில் 9 பேரும், ராஜஸ்தானில் 7 பேரும், உத்தர பிரதேசத்தில் மூவரும் அடங்குவர்.

**பிரதமர் ஆலோசனை:** நாட்டின் பல்வேறு பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ளதையடுத்து, மூத்த அமைச்சர்கள், மத்திய அரசின் உயரதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

பருவமழை சூழலைக் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அவர்களிடம் பிரதமர் மோடி வலியுறுத்தியதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட ட்விட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரிகள், தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப்படையினர் உள்ளிட்டோர் பருவமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை விரைந்து வழங்கி வருவதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



ஹிமாசல் மாநிலம், குலு மாவட்டத்தில் பியாஸ் நதியில் திங்கள்கிழமை வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில், பாலத்தின் வழியாக நதியைக் கடந்த மக்கள்.

**ஹிமாசலில் நிலச்சரிவு:** கனமழை காரணமாக ஹிமாசலின் சிம்லா பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். மாநிலத்தின் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால், போக்குவரத்து வசதி துண்டிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக, சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட 300-க்கும் அதிகமானோர் பல இடங்களில் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுத்த 24 மணி நேரத்துக்கு மேலும் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால், பாதுகாப்பாக இருக்குமாறு மக்களை அறிவுறுத்திய முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு, தேவையின்றி வீட்டைவிட்டு வெளியேற வேண்டாமென்றும் கூறினார்.

நிலச்சரிவால் 120-க்கும் அதிகமான சாலைகளில் போக்குவரத்து தடைபட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கனமழையால் மாநிலத்தில் செவ்வாய்க்கிழமை வரை ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன; கல்வி நிறுவனங்களுக்கும் செவ்வாய்க்கிழமை வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

**பஞ்சாப், ஹரியாணாவில் மழை:** பஞ்சாபில் தொடர்ந்து 3-ஆவது நாளாக கனமழை பெய்தது. அங்கு மீட்புப் பணிகளை விரைவுபடுத்துமாறு முதல்வர் பகவந்த் மான் உத்தரவிட்டுள்ளார். மக்கள் யாரும் அச்சமடைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். பள்ளி, கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ஹரியாணாவில் பெய்த கனமழையால் சில சாலைகள் நீரில் மூழ்கின. அதனால், போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. வெள்ள பாதிப்புகள் குறித்து மாநில முதல்வர் மனோகர் லால் கட்டர் அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினார்.

**ராஜஸ்தானில் 231 மி.மீ. மழை:** ராஜஸ்தானின் சிரோஹி மாவட்டத்தில் உள்ள மவுண்ட் அபு பகுதியில் 231 மி.மீ. அளவுக்கு கனமழை பெய்தது. பல பகுதிகளில் மழைநீர் தேங்கியதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது.

**உத்தர பிரதேச முதல்வர் ஆய்வு:** ஹிமாசல், உத்தரகண்டில் கனமழை பெய்வதால் நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கங்கை நதியிலும் அதன் கிளை நதிகளிலும் வெள்ளப்பெருக்கை எதிர்கொள்வதற்கான தயார்நிலையை உறுதி செய்யுமாறு உத்தர பிரதேச அதிகாரிகளுக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டார்.

மகாராஷ்டிரத்தின் மும்பையில் ஆண்டு சராசரியில் இதுவரை 31.17 சதவீத மழை பெய்துள்ளதாக மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தில் பெய்த கனமழை காரணமாக நர்மதை நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதனால், தீவுப் பகுதியில் நால்வர் சிக்கிக் கொண்டனர். 13 மணி நேர தொடர் முயற்சிக்குப் பிறகு அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பாக மீட்டனர்.

## ஹிமாசல், உத்தரகண்ட் முதல்வர்களுடன் பேச்சு



ஹிமாசல் முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு, உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி ஆகியோரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் மோடி, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு தொடர்ந்து வழங்கும் என உறுதியளித்தார். கனமழை காரணமாக மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் முதல்வர்களிடம் பிரதமர் கேட்டறிந்தார்.

## 4 மாநிலங்களில் 39 பேரிடர் மீட்புக் குழுக்கள்

கனமழை தீவிரமடைந்துள்ளதையடுத்து வட மாநிலங்களில் தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 39 குழுக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாபில் 14 குழுக்களும், ஹிமாசலில் 12 குழுக்களும், உத்தரகண்டில் 8 குழுக்களும், ஹரியாணாவில் 5 குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. மாநில அதிகாரிகளுடன் இணைந்து அக்குழுக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிஎம் கேர்ஸ் நிதி மூலம் உதவி: காங்கிரஸ் வலியுறுத்தல்

கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு பிஎம் கேர்ஸ் நிதித் தொகுப்பு மூலமாக கூடுதல் நிவாரண உதவிகளை மத்திய அரசு வழங்க வேண்டுமென காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

கனமழை சார்ந்த நிகழ்வுகளில் பலர் உயிரிழந்ததற்கு கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி வருத்தம் தெரிவித்துள்ளார். மீட்புப் பணிகளில் உரிய உதவிகளை வழங்குமாறு கட்சித் தொண்டர்களுக்கு அறிவுறுத்தியுள்ள அவர், அனைவரும் ஒருங்கிணைந்து பேரிடர் சவால்களை எதிர்கொள்வோம் என்றும் கூறியுள்ளார்.

EVA STALIN

## இன்று 50–ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்

**புது தில்லி, ஜூலை 10:** ஜிஎஸ்டி கவுன்சிலின் 50–ஆவது கூட்டம் தில்லியில் செவ்வாய்க்கிழமை (ஜூலை 11) நடைபெறுகிறது.



நாட்டில் ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், ஜிஎஸ்டி குறித்து முக்கிய முடிவுகளை எடுக்கும் ஜிஎஸ்டி கவுன்சிலின் கூட்டம் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இணையவழி விளையாட்டுகள், குதிரைப் பந்தயம், கேசினோ விளையாட்டுகள் ஆகியவற்றுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்க மாநில நிதியமைச்சர்களைக் கொண்ட குழு பெரும்பான்மை அடிப்படையில் பரிந்துரை வழங்கியுள்ளது. அதன் மீது ஜிஎஸ்டி கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மல்டிபிளக்ஸ் திரையரங்குகளில் விநியோகிக்கப்படும் உணவுகளுக்கான சரக்கு–சேவை வரியை 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைப்பது, புற்று நோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் இறக்குமதி மருந்துகளுக்கு ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்களிப்பது உள்ளிட்டவை தொடர்பாகவும் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில், அத்தகைய நிறுவனங்களால் வழங்கப்படும் செயற்கைக் கோள் ஏவுதல் சேவைகளுக்கு ஜிஎஸ்டி-யில் இருந்து விலக்கு அளிப்பது தொடர்பாகவும் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

## சந்திரயான் –3: இறுதிக் கட்டத்தில் ஆயத்தப் பணிகள்

**சென்னை, ஜூலை 10:** சந்திரயான்- 3 விண்கலத்தை ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவுவதற்கான ஆயத்தப்பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. ஏவுவதற்கான கவுன்ட்டவுன் இரு நாள்களில் தொடங்கும் எனத் தெரிகிறது.

நிலவை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்1, சந்திரயான்2 ஆகிய இரு திட்டங்கள் இஸ்ரோவால் செயல்படுத்தப்பட்டன. அவற்றில் முதல் திட்டம் வெற்றி பெற்றதுடன் நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களையும் வெளியிட்டது. இரண்டாவதாக அனுப்பப்பட்ட விண்கலம் திட்டமிட்டபடி தரையிறங்காததால் முழு வெற்றியை எட்டவில்லை.

இந்த நிலையில், சந்திரயான் –3 விண்கலம் வரும் 14–ஆம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஆய்வு மையத்திலிருந்து ஏவப்படவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டமைப்புப் பணிகள் கடந்த வாரமே நிறைவடைந்த நிலையில், தொழில்நுட்ப ரீதியிலான பரிசோதனைகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. மின்னூட்ட பரிசோதனைகள் நிறைவடைந்த நிலையில், எரிபொருள் நிரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த இரு நாள்களில் கவுன்ட் டவுன் தொடங்கும் என இஸ்ரோ மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தயார் நிலையில் இந்தியா!

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் உள்ள கல்வானில் 20 இந்திய ராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் இந்திய – சீன எல்லை பிரச்னைக்கு எந்தவொரு முடிவும் எட்டப்படாமல் தொடர்வது இரு நாடுகளின் ராஜாங்க உறவுக்கு மிகப்பெரிய சவாலாக மாறியிருக்கிறது. எல்லை பேச்சுவார்த்தைகளில், சீனா முட்டுக்கட்டை போடுவது தீர்வு எட்டப்படாமல் இருப்பதற்கு முக்கியக் காரணம்.

திசைதிருப்பும் உத்திகளின் மூலம் எல்லைகளை ஆக்கிரமிப்பதும், எதிர்பாராத நேரத்தில் தாக்குதல் நடத்தி இந்தியா மீது உளவியல் ரீதியான மறைமுகப் போரை முன்னெடுப்பதும் சீனாவின் உத்தியாக இருந்து வருகிறது. 1993-இல் சமாதான ஒப்பந்தம், 1996-இல் பரஸ்பர நம்பிக்கை முயற்சிகள், 2005, 2013 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஆகிய இவற்றில் எதையுமே சீனா பின்பற்றவோ, அதன்படி நடக்கவோ தயாராக இல்லாமல் இருப்பதுதான் மோதல் தொடர்வதற்கு முக்கிய காரணம். அந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு பின்பற்றப்பட்டால் மட்டுமே மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்பட முடியும் என்பது இந்தியாவின் தீர்மானமான முடிவு.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை தன்னிச்சையாக மீறுவதும், மாற்றங்களை ஏற்படுத்துவதும் சீனாவின் சூழ்ச்சியாக இருந்து வருகிறது. ஐந்து மோதல் பகுதிகளில் படை திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஜூன் 15, 2020 தாக்குதல் நிகழ்ந்த கல்வான் பகுதி, பிப்ரவரி 2021–இல் பாங்காங் ஏரியின் தெற்குக் கரை, ஆகஸ்ட் 2021–இல் கோஹ்ரா வெந்நீர் ஊற்று பகுதியிலுள்ள 17–ஆவது கண்காணிப்பு மையம், செப்டம்பர் 2022–இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 15–ஆவது கண்காணிப்பு மையம் ஆகியவற்றில் இரு நாட்டு ராணுவ கமாண்டர்களின் 18 சுற்று பேச்சுவார்த்தைகளின் விளைவாக துருப்புகள் திரும்பப் பெறப்பட்டன.

துருப்புகள் திரும்பப் பெறப்பட்டனவே தவிர அங்கெல்லாம் பதற்றம் தணியவோ, நிலைமை முற்றிலும் சீராகவோ இல்லை. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்திக்கொண்டே போகும் சீனாவின் போக்கு, எல்லை பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்கிற நம்பிக்கையை குறைக்கிறது.

2020 ஜூன் 17–ஆம் தேதி, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் எல்லையில் அமைதி நிலவினால் மட்டுமே இருநாட்டு உறவு மேம்படும் என்று மிகத் தெளிவாகக் கூறியும்கூட சீனா அதை பொருட்படுத்துவதாக இல்லை. 1949–இல் காணப்பட்ட அடிப்படை பிரச்னைகள், எந்தவித மாற்றமோ, தீர்வோ காணப்படாமல் தொடர்கின்றன என்பதுதான் நிஜம்.

இரு நாடுகளுக்கும் இடையே இதுவரை 30 சுற்றுகளுக்கும் மேற்பட்ட பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. எல்லை பிரச்னை குறித்து சிறப்பு பிரதிநிதிகள்; இருநாட்டு வெளியுறவு அமைச்சர்கள்; இருநாட்டு நிதியமைச்சர்கள் சந்தித்து விவாதித்தனர் – அப்படியும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமான சீனாவும், ஐந்தாவது பெரிய பொருளாதாரமான இந்தியாவும் அவரவர் மண்ணில் மற்றவரின் ஊடகவியலாளர்களுக்குக்கூட இடமளிக்காத நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ACADEMY

18 சுற்று பேச்சுவார்த்தைக்குப் பிறகும்கூட எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்தியத் துருப்புகள் வழக்கமாக கண்காணிப்பு நடத்திவந்த டெப்சாங் சமவெளி, டெம்சோக் பகுதிகளில் இருந்து வெளியேற சீனா தயாராக இல்லை. ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்தப் பகுதிகளை சமாதான ஒப்பந்தத்தின் மூலம் தனதாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. எல்லை பிரச்னையில் இடைக்கால ஒப்பந்தத்தின் பகுதியாக அந்த இரு பகுதிகளையும் இந்தியா விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதுதான் சீனாவின் நிபந்தனை.

சீன வெளியுறவு அமைச்சர் கின் காங், பாதுகாப்பு அமைச்சர் லீ ஷங்பூ இருவரும் ஜி–20 மாநாடு, ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு ஆகியவற்றில் கலந்துகொண்டபோது, ஆயிரக்கணக்கான இரு நாட்டு வீரர்களும் குவிந்துகிடக்கும் எல்லையில் அமைதி நிலவுவதாக தெரிவித்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது. இந்தியா – சீனா இரு நாட்டு உறவு மேம்படவும், சர்வதேச அமைப்புகளில் ஒருங்கிணைந்து செயல்படவும், பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படவும் எல்லா முயற்சிகளையும் சீனா முன்னெடுப்பதாக இருவருமே தெரிவித்திருக்கிறார்கள்.

'இருதரப்பும் தொலைநோக்குப் பார்வையுடன் எல்லை பிரச்னையை அணுகி இரு நாட்டு உறவுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்' என்று கூறும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் லீ சொல்லாமல் சொல்வது என்னவென்றால், சீனாவின் ஆக்கிரமிப்பை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

நல்லவேளையாக, சீனாவின் அந்த வலையில் இந்தியா சிக்கிக் கொள்ளவில்லை என்பதைத்தான் எல்லையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சாலை கட்டமைப்பு மேம்பாடு தெரிவிக்கிறது. சாலை கட்டமைப்பு, நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய போர்த் தளவாடங்கள், கூடுதல் துருப்புகள் ஆகியவற்றை எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்தியா தயார் நிலையில் வைத்திருப்பது சீனாவுக்கு தெரியாமல் இல்லை.

கிழக்கு லடாக் பகுதியிலுள்ள காரகோரம் மலைப்பகுதியில் 17,800 அடி உயரத்தில் இருக்கும் சாஷர்லா கணவாய் பகுதியில் 4 கி.மீ. நீளமுள்ள கான்கிரீட் சாலை அமைக்கப்படுகிறது. சஷோமா, சாஷர்லா, முர்கோ ஆகியவற்றை இணைக்கும் 56 கி.மீ. சாலை டெப்சாங் சமவெளி, டெம்சோக் ஆகிய சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியப் பகுதிகளுக்கு துருப்புகளை எளிதாக நகர்த்த உதவும். நாமும் தயார் நிலையில்தான் இருக்கிறோம் என்பதன் அடையாளம் இது.

EVA STALIN IAS ACADEMY

# கட்டுக்குள் வருமா மக்கள்தொகைப் பெருக்கம்?

உலக மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கண்டு சமூக ஆர்வலர்கள் திகைத்து நிற்கின்றனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருப்பது எங்கு போய் முடியுமோ என்ற அச்சமும் வருகிறது. இந்த அசுர வளர்ச்சி சமூக, அரசியல், பொருளாதாரத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

உலகின் ஒட்டுமொத்த மக்கள்தொகை 1950 வாக்கில் சுமார் 200 கோடியாக இருந்தது. கடந்த 70 ஆண்டுகளில் அது 800 கோடியாக வளர்ந்துள்ளது. இந்த அசுர வளர்ச்சி எப்படி ஏற்பட்டது? இந்த வளர்ச்சி இரட்டிப்பானால் இந்த பூமி தாங்குமா என்ற கவலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா இன்று உலகில் அதிக மக்கள்தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் சீனாவை முந்திக் கொண்டு முதல் இடம்பிடித்துள்ளது. இது இந்தியாவுக்குப் பெருமை என்பது போலத் தெரிந்தாலும் உண்மையில் பல பிரச்னைகளை இதனால் எதிர்கொள்ள நேரிடும் என்பதே உண்மை.

நாட்டின் பொருளாதாரத்திலும், நுகர்வுப் பயன்பாட்டிலும் அது ஏற்படுத்தப் போகும் விளைவுகளைப் பற்றியும் மக்கள் கவலைப்பட ஆரம்பித்துள்ளனர். வறுமை, விலைவாசி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை சமுதாயத்தை வாட்டி வதைக்கின்றன. இதற்கும் மேலாக காலநிலை மாற்றத்தின் காரணமாக வாழ்விடங்கள் சுருங்கிக் கொண்டு வருவதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

மக்கள்தொகைப் பெருக்கத்தால் உணவு, இருப்பிடம் போன்ற இன்றியமையாத தேவைகள் அதிகரிக்கவே செய்யும். அதற்காகக் காடுகள், வயல்கள் அழிக்கப்படும். இயற்கை வளங்கள் மேலும் குறைபாடுபடும் என்ற கவலை சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய அச்சம் 19-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. 1798-இல் இங்கிலாந்தில் வாழ்ந்த தாமஸ் மால்தஸ் என்னும் பொருளாதார வல்லுநர், பெருகி வரும் மக்கள்தொகையை கண்டு திடுக்கிட்டார். கட்டுப்பாடு இல்லாமல் மக்கள்தொகை பெருகினால் போதிய உணவு கிடைக்காமல் பஞ்சம் ஏற்படும் என்று நினைத்தார். இதுபற்றி ஒரு நூலும் எழுதினார்.

மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தியின் அளவு போதுமானதாக இல்லையென்றும், அதனால் ஒரு கட்டத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு சமூக ஒழுங்கு கெடுவதற்கு வாய்ப்புள்ளது என்றும் அவர் அந்த நூலில் எழுதினார். இதற்குத் தீர்வு, ஏழைகளைக் குறைவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்துவதுதான் என்று கூறினார்.

அன்றைய சமுதாயம் இதனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்துவிட்டது. இதை வெறும் மக்கள்தொகைப் பெருக்கப் பிரச்னையாகப் பார்க்கக் கூடாது. இது உழைக்கும் மக்கள் மீதான மேட்டுக்குடியினரின் வெறுப்பையும், அதிகத்தையுமே குறிக்கிறது என இடதுசாரிகள் கூறினர்.

ஐ.நா. அமைப்பின் கணக்கெடுப்பின்படி உலக மக்கள்தொகை 8.107 பில்லியன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு சில நாட்களுக்கு முன் வெளியிடப்பட்டது. உலக மக்கள்தொகை பெரிய அளவில் அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது.


உதயை மு. வீரையன்

1700-ஆம் ஆண்டுக்குப் பின் தொழிற்புரட்சியில் ஏற்பட்ட வேகம் மக்கள்தொகை வளர்ச்சியிலும் ஏற்பட்டது. 1960 முதல் 1995 வரை ஏற்பட்ட பசுமைப் புரட்சியின் விளைவாக வேளாண் உற்பத்தியில் ஏற்பட்ட பெருக்கம், மருத்துவத் துறை வளர்ச்சி போன்ற காரணங்களினால் கடந்த 50 ஆண்டுகளில் மக்கள்தொகை வளர்ச்சி மேலும் வேகம் அடைந்தது.

எதிர்காலத்தில் உலக மக்கள்தொகை உச்சத்தை எட்டும் என்றும், பின்னர் பொருளாதாரக் காரணங்கள், நிலப் பற்றாக்குறை, உடல்நலக் குறைபாடுகள், சுற்றுச்சூழல் சீர்கேடுகள் போன்ற காரணங்களால் குறையத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய மக்கள்தொகை அதிகரிப்பால் முதியோரின் அதிகரிப்பும் வேகமாக உள்ளது.

> **நெருக்கடிநிலைக்குப் பிறகு தேசிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு பதிலாக தேசிய குடும்பநலத் திட்டம் உருவாக்கப்பட்டு கட்டாய உத்திகள் கைவிடப்பட்டன. மத்தியில் ஆட்சி மாறும்போதெல்லாம் திட்டங்களும், சட்டங்களும் மாறுவது வாடிக்கையாகிவிட்டது.**

இதற்கு கட்டுப்பாடு வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். மக்கள்தொகைக் கட்டுப்பாடு என்பது மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதாகும். பொதுவாக இது பிறப்பு விகிதத்தைக் குறைப்பதால் மட்டுமே ஏற்படும்.

பண்டைய கிரேக்கத்தில் முதன் முதலாக மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மக்கள்தொகையைக் கட்டுப்பாட்டில் வைக்க சிசுக்கொலை, கருக்கலைப்பு போன்றவை ஊக்குவிக்கப்பட்டன.

கட்டாய மக்கள்தொகை கட்டுப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக சீன மக்கள் குடியரசின் 'ஒரு குழந்தை' கொள்கையைக் கூறலாம். இதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது கடினமான வாழ்க்கையாக மாற்றப்பட்டது. இந்தக் கொள்கையின் விளைவாகக் கட்டாயக் கருக்கலைப்பு, சிசுக்கொலை போன்ற நடவடிக்கைகள் நடந்தன என்ற குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த இந்திய அரசும் சில நடவடிக்கைளை மேற்கொண்டது. பெருகி வரும் மக்கள்தொகையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, மக்கள் வாழ்க்கைத் தரம் ஆகியவை அதிக அளவில் பாதிக்கப்பட்டதால், இந்திய அரசு அதிகாரபூர்வமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தது.

இந்தத் திட்டம் 1950-60-களில் தீவிரமாக செயல்படுத்தப்பட்டது. பல்வேறு பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகளை ஊக்குவிப்பதன் மூலம் மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தைக் குறைத்தல் அதன் முக்கியக் குறிக்கோளாக இருந்தது.

நெருக்கடிநிலைக்குப் பிறகு தேசிய குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு பதிலாக தேசிய குடும்பநலத் திட்டம் உருவாக்கப்பட்டு கட்டாய உத்திகள் கைவிடப்பட்டன. பரந்த அளவிலான சமூகவியல் இலக்குகள் மட்டுமே இப்போது இத்திட்டத்தில் உள்ளன. மத்தியில் ஆட்சி மாறும்போதெல்லாம் திட்டங்களும், சட்டங்களும் மாறுவது வாடிக்கையாகிவிட்டது. மக்களின் தேவைகளை முழுமையாக்குவதை விட ஆட்சியாளர்களின் தேவைகளை முழுமையாக்குவதே அதிகாரிகளின் கடமையாகிவிட்டது.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார். இன்று வாடிய பயிரைக் காணும் போதெல்லாம் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறைக்கு மக்கள் பெருக்கமும் ஒரு காரணம் எனலாம். மக்கள் வாழ்வாதாரத்துக்காகவும், வாழ்விடங்களுக்காகவும் காடுகளும் அழிக்கப்படுகின்றன.

மக்கள்தொகை அதிகரிப்பதனால் காடுகள் சுருங்கி, தண்ணீர் ஆதாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது. தண்ணீரின் அவசியம் பற்றியும், காடுகளின் பாதுகாப்பு பற்றியும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 13 முதல் 17 வரை தேசிய தண்ணீர் வாரமாக அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவில் இயற்கை ஆதாரங்கள் மூலம் ஆண்டுக்கு 12 லட்சம் கோடி கன அடி தண்ணீர் கிடைக்கிறது. இதில் 2.10 லட்சம் கோடி கன அடி தண்ணீர் ஆவியாகிவிடுகிறது. 2.10 லட்சம் கோடி கன அடி தண்ணீர் நிலத்தின் வழியாக செல்லும்போது வீணாகிறது. ஒவ்வொரு ஆண்டும் மிகப் பெரிய அளவில் 4.5 லட்சம் கோடி கன அடி தண்ணீர் வெள்ளம் காரணமாகக் கடலில் கலக்கிறது. மீதம் உள்ள 3.3 லட்சம் கோடி கன அடி தண்ணீரை வைத்தே விவசாயம், குடிநீர், தொழிற்சாலை தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

முறையற்ற தொழிற்சாலைகளால் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து பனிப்பாறைகள் உருகி அவற்றின் உயரம் குறைவதால் காற்றின் ஈரப்பதம் குறைந்து மழையின் அளவும் குறைந்து விட்டது. இந்தியாவில் 67.7 மில்லியன் ஹெக்டேர் வனப்பகுதி உள்ளது. இந்திய மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் வனத்தைச் சார்ந்தே வாழ்கின்றனர். இந்நிலையில் 41 விழுக்காடு வனப்பகுதி, மக்கள்தொகைப் பெருக்கத்தால் அழியும் அபாயத்தில் உள்ளது. இதையெல்லாம் அரசுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மக்கள்தொகைப் பெருக்கம் குறித்தான கருத்துகளை முதலில் விதைத்தவர் தாமஸ் மால்தஸ்தான். ஆனால், அப்போது அவர் எண்ணியதுபோல் மக்கள்தொகைப் பெருக்கம் பெரும் நெருக்கடியை உருவாக்கவில்லை. 19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில் மக்கள் தொகை விரைவாகப் பெருகியது. எனினும் அதற்கேற்ப உணவும், பிற பொருள்களின் உற்பத்தியும் பெருகியதால் வல்லுநர்களின் கணக்கு தவறு என்பது தெளிவானது.

இடதுசாரிக் கருத்துடையவர்களின் கொள்கையும் அதுதான். உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் வெறும் வயிற்றோடு மட்டும் பிறக்கவில்லை. இரண்டு கைகளோடும் பிறக்கிறான். மக்கள்தொகைப் பெருக்கத்தில் உழைப்பாளர்களின் உழைப்பும், உற்பத்தியும் ஒளிந்திருக்கிறது என்பது அவர்களின் கருத்தாகும்.

நவீன மருத்துவ வசதிகளும், தொழில்நுட்ப ஆற்றலும் இன்று பெருமளவில் இறப்பு விகிதத்தைக் குறைத்து மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு வழி வகுத்திருக்கின்றன. மக்கள்தொகை அதிகரிப்பால் இயற்கை வளங்களின் பயன்பாடும், பொருள் உற்பத்தியும் அதிகரித்திருக்கிறது. பல குழந்தைகளைப் பெற்ற ஏழைகளைவிட ஒரு குழந்தையைக் கொண்ட செல்வந்தரின் குடும்பமே சூழல் சீர்கேட்டிற்குப் பெரிதும் காரணமாய் இருக்கிறது.

பண்டைக் காலத்தில் இருந்தே மக்கள்தொகை பற்றி அறிஞர்கள் இடையே கவலை இருந்ததாகத் தெரிகிறது. தத்துவ ஞானி பிளேட்டோ இதுபற்றிச் சில வலுவான கருத்துகளைக் கொண்டிருந்தார். 'திரிபப்ளிக்' என்னும் அவர் படைப்பில் மக்கள்தொகை பற்றியும், நுகர்வு கலாசாரம் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்.

அதிகரிக்கும் மக்கள்தொகை பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் முயற்சியாக ஆண்டுதோறும் ஜூலை 11 அன்று உலக மக்கள்தொகை நாள் கொண்டாடப்படுகிறது. என்றாலும், அதன் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துவது பொதுமக்கள் கைகளில்தான் உள்ளது.

**இன்று (ஜூலை 11)**
**உலக மக்கள்தொகை நாள்.**

கட்டுரையாளர்:
**எழுத்தாளர்.**

# பிரதமர் மோடிக்கு 'லோகமான்ய திலகர் தேசிய விருது'

## நிகழ்ச்சியில் பங்கேற்க சரத் பவாருக்கு அழைப்பு

**புணே, ஜூலை, 10:** மகாராஷ்டிரத்தின் புணே நகரில் வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடிக்கு லோகமான்ய திலகர் தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.

அந்த மாநிலத்தில் நிலவும் அரசியல் சலசலப்புகளுக்கிடையே இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திலகர் அறக்கட்டளைத் தலைவர் தீபக் திலக் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'பிரதமரின் விடாமுயற்சி மற்றும் செயல்பாட்டுகளைக் கவனத்தில் கொண்டு அவரது பணிகளைச் சிறப்பிக்கும் வகையில், நிகழாண்டு லோகமான்ய திலகர் தேசிய விருதுக்கு பிரதமர் மோடியை அறக்கட்டளையின் அறங்காவலர்கள் குழு ஒருமனதாகத் தேர்வு செய்தனர்.

லோகமான்ய பாலகங்காதர திலகரின் 103-ஆவது நினைவுநாளையொட்டி வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடிக்கு மதிப்புமிக்க 'லோகமான்ய திலகர் தேசிய விருது' வழங்கி 'திலக் ஸ்மாரக் மந்திர் டிரஸ்ட்' கௌரவிக்க உள்ளது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகத் தேசியவாத காங்கிரஸ் (என்சிபி) தலைவர் சரத் பவார் பங்கேற்க இருக்கிறார். மகாராஷ்டிரா ஆளுநர் ரமேஷ் பயஸ் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மாநில அரசியல் சூழலில் பிரதமருக்கு விருது வழங்கும் விழாவில் சரத் பவார் பங்கேற்க அழைப்புவிடுக்கப்பட்டிருப்பது கூடுதல் கவனம் பெற்றுள்ளது.

# பார்த் சலுன்கே சாதனை: 11 பதக்கங்களுடன் இந்தியா நிறைவு

**லிமெரிக், ஜூலை 10:** அயர்லாந்தில் நடைபெற்ற இளையோர் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் பார்த் சலுன்கே ரீகர்வ் ஆடவர் தனிநபர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். இப்போட்டியில் அந்தப் பிரிவில் சாம்பியன் ஆன முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

ரீகர்வில் 21 வயதுக்கு உள்பட்ட ஆடவர் தனிநபர் இறுதிச்சுற்றில் பார்த் சலுன்கே 26-26, 25-28, 28-26, 29-26, 28-26 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் சாங் இன் ஜுனை வீழ்த்தினார்.



21 வயதுக்கு உள்பட்ட மகளிர் தனிநபர் பிரிவில் இந்தியாவின் பாஜா கௌர் 28-25, 27-27, 29-25, 30-26 என்ற கணக்கில் சீன தைபேவின் சு சின் யுவை சாய்த்து வெண்கலப் பதக்கம் பெற்றார்.

இதையடுத்து இந்தியா, 6 தங்கம், 1 வெள்ளி, 4 வெண்கலம் என 11 பதக்கங்களுடன், பட்டியலில் 2-ஆம் இடம் பிடித்து போட்டியை நிறைவு செய்தது.

இந்தப் போட்டியின் வரலாற்றில் இந்தியா இதுவரை வென்ற பதக்கங்களில் இதுவே அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

EVA STALIN IAS

# லக்ஷயா சென் சாம்பியன்



லக்ஷயா சென்

**கால்கேரி, ஜூலை 10:** கனடா ஓபன் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென், திங்கள்கிழமை சாம்பியன் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அவர் 21-18, 22-20 என்ற கேம்களில் சீனாவின் லீ ஷி ஃபெங்கை சாய்த்தார். கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்ற பிறகு, லக்ஷயா சாம்பியனாகும் முதல் போட்டி இதுவாகும்.

வெற்றிக்குப் பிறகு பேசிய லக்ஷயா, 'பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெறும் காலகட்டம் தொடங்கியிருக்கும் நிலையில், எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்காமல் கடினமாக இருந்தது. அத்தகைய தருணத்தில் இந்த வெற்றி எனது தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்தும் விதமாக கிடைத்துள்ளது.

லீ எப்போதுமே கடினமான போட்டியாளராக இருப்பதால், அவருக்கு எதிரான ஆட்டம் சவால் மிக்கதாகவே இருக்கும். இருவரும் சமபலத்துடனே மோதினாலும், முக்கியமான கட்டங்களில் புள்ளிகளை கைப்பற்றியதால் வெற்றி எனது வசமானது' என்றார்.

பரபரப்பான இந்த இறுதி ஆட்டத்தில் இரு வீரர்களுமே பரஸ்பரம் அதிக ரேலிக்களில் ஈடுபட்டனர். ஆட்டத்தின் போது சுமார் 390 கி.மீ. வேகத்தில் லீ இரு ஸ்மாஷ்களை விளாச, பதிலுக்கு லக்ஷயா சுமார் 400 கி.மீ. வேகத்தில் இரு ஸ்மாஷ்களை விட்டு பதிலடி கொடுத்தார்.

இப்போட்டியில் சாம்பியனான லக்ஷயாவுக்கு வெற்றிச் சின்னத்துடன், ரூ.26 லட்சம் ரொக்கப் பரிசும், 500 ரேங்கிங் புள்ளிகளுடன் கிடைத்தன.

**5**

ஆல் இங்கிலாந்து சாம்பியன்ஷிப் போட்டியில் நடப்பு சாம்பியனாக இருக்கும் லீ ஷி ஃபெங்கை இத்துடன் 7-ஆவது முறையாகச் சந்தித்த லக்ஷயா, தற்போது 5-ஆவது வெற்றியைப் பதிவு செய்திருக்கிறார்.

**2**

இத்துடன் 500 புள்ளிகள் கொண்ட உலக பாட்மிண்டன் சம்மேளன போட்டிகளில் தனது 2-ஆவது பட்டத்தை கைப்பற்றியிருக்கிறார் லக்ஷயா. இதற்கு முன் அவர், கடந்த ஆண்டு இந்தியா ஓபன் பாட்மிண்டன் போட்டியில் வாகை சூடியிருந்தார்.

**2**

நடப்பாண்டில் சர்வதேச பாட்மிண்டன் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்ற 2-ஆவது வீரர் லக்ஷயா ஆவார். முதலில் ஹெச்.எஸ். பிரணாய் கடந்த மே மாதம் மலேசியா மாஸ்டர்ஸில் கோப்பை வென்றிருந்தார்.

**அடுத்து:** கனடா ஓபனை தொடர்ந்து, அமெரிக்காவில் செவ்வாய்க்கிழமை தொடங்கும் யுஎஸ் ஓபன் பாட்மிண்டன் போட்டியிலும் லக்ஷயா சென் பங்கேற்கிறார். அவரோடு, பி.வி.சிந்து, சாய் பிரணீத் உள்ளிட்ட இந்தியர்களும் அதில் களம் காண்கின்றனர்.

# செய்தி வாசிப்பாளருக்குப் போட்டியாக 'லிசா' ஏ.ஐ. செய்தி வாசிப்பாளர்!

**சென்னை,ஜூலை 10:** தொலைக்காட்சி பெண் செய்தி வாசிப்பாளர்களுக்கு சவால் விடும் வகையில், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) பெண் செய்தி வாசிப்பாளர் கச்சிதமாக செய்தி வாசித்த நிகழ்வு அரங்கேறியுள்ளது.



ஒடிஸாவில் ஏ.ஐ. தொழில்நுட்பம் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட 'லிசா' என்னும் செயற்கை நுண்ணறிவு செய்தி வாசிப்பாளர்.

ஒடிஸா மாநிலத்தில் 'ஓடிவி' தனியார் தொலைக்காட்சி 'லிசா' எனும் செயற்கை நுண்ணறிவுப் பெண் செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒடிஸாவில் நெய்யப்படும் பாரம்பரிய கைத்தறி சேலையை உடுத்தி ஒடியா மற்றும் ஆங்கில மொழியில் செய்தி வாசிக்கும் வகையில் 'லிசா' வடிவைக்கப்பட்டுள்ளது. எண்ணற்ற மொழிகளை பேசும் திறனுடைய லிசா, தற்போது ஒடியா மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை மட்டும் பேசும்படி உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் மற்ற இந்திய மொழிகளிலும் ஒடியா மொழியில் மிகுந்த புலமையுடன் செய்திகளைத் தொகுத்து வழங்கும்படியாக நிரலாக்கம் செய்யப்படவுள்ளது.

'லிசா' அறிமுகம் செய்யப்பட்ட நிகழ்வில் காணொலி வாயிலாக உரையாற்றிய 'லிசா' தன்னை உருவாக்கிய ஓடிவிக்கு நன்றி தெரிவித்து இனிவரும் காலங்களில் தான் தொகுத்து வழங்க இருக்கும் செய்திகளை அனைவரும் காண வேண்டும் என்று பேசியது. பெண்ணுக்கே உரிய அழகான முக பாவனைகளுடன் லிசா செய்திகளைத் தொகுத்து வழங்கியது அனைவரையும் கவர்ந்தது. வேண்டிய முக பாவனைகள், விருப்பப்பட்ட ஆடைகளை 'லிசா' மாற்றிக்கொண்டது.

இனிவரும் காலங்களில் செய்தி வாசிப்பாளர் பணிக்கு பல 'லிசா'க்கள் வரும் என்பது உறுதியாகிவிட்டது.